# திருகோணமலை ஷண்முகா இந்துக் கல்லூரிக்குள் இந்துத்வா இனவாதம் ஊடுறுவி உள்ளதா?

## லத்தீப் பாரூக்

திருகோணமலையில் உள்ள அரசாங்க பாடசாலையான ஷண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் லிங்கேஷ்வரி அங்கு கற்பிக்கும் ஒரு முஸ்லிம் ஆசிரியையான பாத்திமா பஹ்மிதா றனீஸ் ஹிஜாப் அணிந்து வந்தமை காரணமாக தனது கடமைகளை செய்ய விடாமல் தடுத்துள்ளார். இது முற்றிலும் எதிர்ப்பாக்கப்படாத ஒன்றாகும்.

இலங்கைக்குள் இந்தியாவின் ஆளும் கட்சியான பிஜேபிக்கு ஆதரவான இந்துத்வா தீவிரவாத அமைப்பான ஆர்எஸ்எஸ், அதன் இணை அமைப்புக்களான ஷிவ்சேனா, விஷ்வ இந்து பரிஷாத், பஜரங்தள் என்பனவற்றோடு, முஸ்லிம்களுக்கு எதிரான அவர்களின் தீய நிகழ்ச்சி நிரலோடு நாடு முழுவதும் ஊடுறுவி உள்ளதன் பின்னணியே இதற்கு மூல காரணமாகும்.

இதேபோன்றதோர் நிலைமை தற்போது இந்தியாவின் கர்னாடகா மாநிலத்திலும் தூண்டி விடப்பட்டுள்ளது. இந்துத்வா பாஸிஸ போக்கு அமைப்புக்கள் பாடசாலை நிர்வாகங்களின் ஒத்துழைப்போடு இதற்கு வித்திட்டுள்ளன. கடந்த டிசம்பர் முதல் இது அந்த மாநில சமூகங்களைக் கூறு போட்டு வருகின்றது. இந்த விடயம் தற்போது இந்தியப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை இந்து மகளிர் கல்லூரியில் அதன் அதிபர் லிங்கேஷ்வரி நீதிமன்ற உத்தரவு மற்றும் கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்கள் என்பனவற்றை மீறி ஆசிரியை பஹ்மிதாவுக்கு தனது கடமைகளை ஏற்க விடாமல் தடுத்துள்ளார். ஆசிரியை பஹ்மிதா அரை நிர்வாணத்துடனோ அல்லது பிகினி எனப்படும் வெறுமனே இரு துண்டு ஆடைகளுடனோ பாடசாலைக்குள் செல்லவில்லை. மாறாக உலகில் பெண்களுக்கு மிகவும் கௌரவமான ஆடை என வர்ணிக்கப்படும் ஹிஜாப் அணிந்து தான் சென்றுள்ளார்.

இருந்தும் கூட பஹ்மிதா தனது கடமைகளைப் பொறுப்பேற்க விடாமல் அதிபர் தடுத்துள்ளார். அவரை அச்சுறுத்தும் வகையில் வெளியில் இருந்து தனிநபர்களைப் பாடசாலைக்குள் திரட்டி உள்ளார். அந்த ஆசிரியையின் கழுத்து நெறிக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் ஒரு கொலை அச்சுறுத்தல். அந்த முஸ்லிம் ஆசிரியைக்கு எதிராகப் பாடசாலையின் ஏனைய ஆசிரியைகளும் மாணவிகளும் தூண்டி விடப்பட்டுள்ளனர். சட்ட விரோதமான முறையில் மாணவிகளை வீதிகளுக்கு இழுத்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இது பாடசாலைகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கொவிட் விதிமுறைகளை முற்றிலும் மீறுகின்ற ஒரு விடயமாகும். போலியாக குற்றம் சாட்டி அதிபர்

ஆஸ்ப்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவை எல்லாமே அந்த முஸ்லிம் ஆசிரியையின் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற ஒரு விடயமாகும். அது மட்டுமன்றி அரசியல்சாசன உரிமைப்படி ஒரு தனிநபருக்கு வழங்கப்பட்டுள்ள சமயச் சுதந்திரமும் இங்கு முற்றாக மீறப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத செயற்பாடுகளுக்கு மேலும் மெருகூட்டும் வகையிலேயே அதிபரின் உரையும் அமைந்துள்ளது. அவர் தனது உரையில் தனது இந்துக் கல்லூரி தமிழர்களுக்கு மட்டும் உரியது என்றும் ஏனைய கலாசாரங்களுக்கு அங்கு இடமளிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார். அது ஒரு அரசாங்க பாடசாலை என்பதையும் அரச பாடசாலைகளில் எல்லா இனங்களுக்கும் சமயங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டையும் அவர் முற்றாக மறந்து பேசி உள்ளார். இது அவரது இனவாத மனோநிலையையும், அடங்காபிடாரி தனத்தையும், அறிவீனத்தையும், சட்டத்தை மதிக்காத போக்கையும் மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தாக்குதலுக்கு ஆளான அசிரியை பஹ்மிதா போலியாக தாக்கப்பட்டதாகக் கூறி ஆஸ்பத்திரியில் அனுமதி பெற்ற அதிபர் லிங்கேஷ்வரிக்கு முன்னதாகவே ஆஸ்பத்திரியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எந்த சுகாதாரப் பிரச்சினைகளும் இன்றி அதிபர் ஆஸ்பத்திரியில் ஓய்வெடுததார்.

இதை ஒரு தெளிவான இனவாதம் என்று கண்டித்துள்ள நீதி அமைச்சர் அலி சப்ரி நீதிமன்றமும் மனித உரிமை ஆணைக்குழுவும் ஆசிரியை பஹ்மிதாவுக்கு ஹிஜாப் அணிவதற்கான அனுமதியை வழங்கி இருக்கையில் அதிபர் அதை எவ்வாறு தடுக்க முடியும் எனக் கேள்வி எழுப்பினார். பாதுகாப்பு காரணங்களுக்காக முகத்தை மூடுவது மட்டுமே தவிர்க்கப்பட வேண்டும் என கேற்கப்பட்டுள்ளது என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.



***பெரும்பாலும் அதிபரால் தூண்டிவிடப்பட்ட ஆசிரியைகள் உற்பட இந்துக் குழுக்கள்; ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்***

அதிபர் லிங்கேஷ்வரி மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகள் ஆகியோரை மேற்கோள்காட்டி திருகோணமலை பாரளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் தெரிவித்துள்ள கருத்தில் கல்வி அமைச்சு அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கு தூபமிடுவதற்கு பதிலாக அதை தணித்துவைக்கவும் தீர்த்து வைக்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுள்ளார். இந்த விடயத்தில் உயர் கல்வி அதிகாரிகளின் செயற்பாடுகள் ஏமாற்றம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியை பஹ்மிதாவுக்கு ஏற்பட்ட நிலைமயை நடு நிலை சிந்தனைப் போக்கு கொண்ட தமிழ் மக்கள் பலர் கண்டித்துள்ளனர். இது ஒரு அரச பாடசாலை அங்கு; ஆசிரியராகப் பணியாற்ற தகுதி உள்ள எவரும் கற்பிக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உதாரணத்துக்கு கொழும்பு சாஹிராக் கல்லூரி ஒரு முஸ்லிம் பாடசாலை. அங்கிருந்து கீhத்திமிக்க தமிழ் கல்விமான்கள, தொழில்சார் நிபுணர்கள், புத்திஜீவிகள், ஊடகத்துறையினர் மற்றும் அரசியல்வாதிகள் பலர் உருவாகி உள்ளனர் தெளிவான இன நல்லுறவுப் போக்கிற்கு இது எடுத்துக் காட்டாக உள்ளது.

அதிபர் லிங்டீகஷ்வரி தனித்துச் செயற்பட்டாரா அல்லது அவருக்குப் பின்னால் அவரைத் தூணடிவிட்ட சக்திகள் எதுவும் உள்ளனவா? என்பதே இப்போதுள்ள கேள்வி.

இந்தியாவில் முஸ்லிம்களை முற்றாக ஒழித்து விட வேண்டும் என்ற நோக்கில் ஓய்வின்றி பணியாற்றும் தீவிர போக்கு இந்துத்வா சக்திகள் இப்போது இலங்கையிலும் தாராளமாகச் செயற்படுகின்றனர். முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் இந்த தீய சக்திகளுக்கான கதவுகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலேயே திறந்து விடப்பட்டன.

அன்றைய காலப்பகுதியில் சிரேஷ்ட பிஜேபி தலைவர்களில் ஒருவரான ரவி ஷங்கர் பிரசாத் ஆர்எஸ்எஸ் மற்றும் ஷிவ்சேனா உறுப்பினர்களுடன் இணைந்து ராஜபக்ஷ சகோதரர்களுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். ராஜதந்திர ரீதியான எந்த நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் பின்பற்றாது அன்று கொழும்பில் இருந்த உயர் ஸ்தானிகராலாய அதிகாரிகள் இந்த சந்திப்பை ஒழுங்கு செய்திருந்ததாகப் பின்னர் தெரிய வந்தது.

ரவி ஷங்கருடன் ஆர்எஸ்எஸ் பிரதிநிதி ராம் மாதவ், ஷிவ்சேனா தலைவர்களில் ஒருவரான சுரேஷ் பிரபு, இந்திய முன்னாள் வெளியுறவு செயலாளர் விவேக் கட்ஜு, பிஜேபியின் சட்டத்தரணி மொனிகா அரோரா, சிரேஷ்ட ஊடகவியலாளா சுவாபொன் தாஷ்குப்தா ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

பிஜேபி தலைமையிலான இந்தக் குழுவின் இலங்கை விஜயம் ஆர்எஸ்எஸ் பிரதிநிதி ராம் மாதவ் மேற்கொண்ட முயற்சிகளால் தான் இடம்பெற்றது. இந்தியாவில் உள்ள ஒரு அமைப்பு மற்றும் கொழும்பில் உள்ள சர்வதேசக்

கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையம் என்பனவற்றின் ஒத்துழைப்பைப் பெற்று தான் அவர் இந்த சந்திப்புக்கான வழிகளை ஏற்படுத்திக் கொண்டதாக பின்னர் வெளியான தகவல்களில் அறிந்து கொள்ள முடிந்தது.

2014 அக்டோபரில் ஷிவ்சேனா அதன் கிளையை வவுனியாவில் தொடங்கியது. மரவன்புலவு சச்சிதானந்தன் ஷிவ்சேனாவின் பிரத அமைப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினார். இந்திய ஷிவ்சேனா, பிஜேபி, ஆர்எஸ்எஸ், என்பனவற்றின் பூரண ஆதரவு தமக்கு உள்ளதாக அவர் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். மும்பாயில் உள்ள ஷிவ்சேனாத் தலைவர் சஞ்சய் ராவுட் இலங்கைக் கிளைக்கு தமது கட்சியின் பூரண ஆதரவு வழங்கப்படும் என அறிக்கை விடுத்தார்.

கொழும்பு டெலிகிராப் இணையத்தில் பத்தி எழுத்தாளர் லக்மால் ஹெட்டிஆரச்சி இது பற்றிக் குறிப்பிடுகையில் இந்த அடிப்படைவாத இந்து அமைப்பின் கிளையின் நோக்கங்கள் எதுவும் புரிந்து கொள்ள முடியாத அல்லது புரிந்து கொள்ளக் கஷ்டமான ரொக்கெட் விஞ்ஞானமல்ல முஸ்லிம் மற்றும் இந்து தமிழ் சமூகங்களுக்கு இடையில் மேலும் பிரிவினைகளைத் தூண்டி அமைதியின்மையை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம் என்று கூறினார்.




***கர்நாடக மாநிலத்தின் குண்டாபுர கிராமத்தில் ஹிஜாப் அணிந்து வந்த பள்ளி மாணவிகளுக்கு பாடசாலைக்குள் அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து அவர்கள் சுட்டெறிக்கும் வெய்யிலில் பாடசாலைக்கு வெளியே அமர்ந்துள்ளனர் (படஉதவி ஏஎப்பி)***

தற்போது முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் ஆடை அணிவதற்கு எதிராக இந்தியா முழுவதும் மேற்கொண்டுள்ள பிரசாரம் கர்நாடகா மாநிலத்தில் மோசமான கட்டத்துக்கு வந்துள்ளது. பாடசாலைகளுக்குள் முஸ்லிம் மாணவிகள்

ஹிஜாபுடன் வரக் கூடாது என ஒரு கல்லூரி நிர்வாகம் விதித்துள்ள தடை மதச்சார்பற்ற இந்திய அரசியல் யாப்பின் மூலம் இந்திய மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை சுதந்திரத்தை முற்றாக மீறும் வகையில் அமைந்துள்ளது. இந்தத் தடை ஏனைய கல்லூரிகளுக்கும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ள பின்னணியில் அரசியல் யாப்பில்; வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மீறி ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் ஆடைகள் தொடர்பாக கல்வி நிறுவனங்கள் இவ்வாறான தடைகளை விதிக்கலாமா என்ற கேள்வி தேசிய மட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ஹிஜாப் அணிவதற்கான உரிமை அரசியல் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ளது என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கர்நாடகாவில் ஏற்பட்டுள்ள ஹிஜாப் விவகாரம் பற்றி ஒத்திவைக்கப்பட்ட வேளை விவாதம் ஒன்றுக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என இந்திய பாராளுமன்றத்தைக் கேட்டுள்ளனர். இந்திய மத்திய கல்வி அமைச்சர் இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட வேண்டும் என காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. பாடசாலை மாணவிகளுக்கு உரிய அரசியல் யாப்பு மூலமான உரிமைகள் பாதகாக்கப்டுவதை அவர் உறுதி செய்து இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என காங்கிரஸ் கேட்டுள்ளது.

கர்நாடகா மாநில அரசை காரசாரமாகக் கண்டித்து மாநில சட்ட சபையில் உரையாற்றிய காங்கிரஸ் மாநில பிரதிநிதி பி.கே. ஹரிபிரசாத் ஹிஜாபுக்கும் காவிக்கும் இடையில் உடுப்பி மாவட்டத்தில் தேவையில்லாத ஒரு பிரச்சினையை உருவாக்கி ஆபத்தான நீரோட்டத்தில் மீன் பிடிக்கும் முயற்சியில் பிஜேபி ஈடுபட்டுள்ளது. தமது குறுகிய அரசில் நோக்கங்களுக்காக ஒன்றுமே இல்லாத விடயங்களை தூக்கிப்பிடித்து தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்குவது தான் இவர்களின் நோக்கமாக உள்ளது. ஏற்கனவே நோய் பரவல் நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்விக்கு பிஜேபி மேலும் ஆபத்தை உருவாக்குகின்றது என்று அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இதே இந்துத்வா இனவெறிக் கொள்கை தான் இப்போது திருகோணமலை இந்து மகளிர் கல்லூரிக்குள்ளும் ஊடுறுவியுள்ளதாகத் தெரிகின்றது. இது இரண்டு சமூகங்களுக்குமே அழிவையும் ஆபத்தையும் ஏற்படுத்தக் கூடியது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களில் உள்ள சமாதானத்தை விரும்பும் சக்திகள் இந்தப் பிரச்சினை விகாரமடைந்து அதன் அடுத்த கட்டத்துக்கு செல்லுமுன் முளையிலேயே கிள்ளிவிடும் முயற்சிகளில் அவசரமாக ஈடுபட வேண்டும். இந்த விரும்பத்தகாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தீய சக்திகள் தமது நலன்களை அடைந்து கொள்ள முன் சமாதானத்தையும் நல்லுறவையும் நேசிக்கும் இரு தரப்பு சக்திகளும் இணைந்து துரிதமாகச் செயற்பட்டு இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும். **(முற்றும்)**